ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

திங்கள் ❖ செப்டம்பர். 04, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 332 ❖ ரூ.10







### இம்மாதம் 17ம் தேதி வேலூரில் திமுகவின் முப்பெரும் விழா

# கடிதம்

## இண்டியா கூட்டணியின் பயத்தால் சமையல் கேஸ் சிலிண்டர் விலைக் குறைப்பு நாடகம் ; முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, செப். 4–**

**மும்பையில் நடந்த இண்டியா கூட்டணியின் மூன்றாவது கூட்டத்தில் மேலும் பல கட்சிகள் இணையும் என்று அறிவிக்கப்பட்டபோது, பாஜக அரசின் பயத்தின் விளைவை சமையல் கேஸ் சிலிண்டர் விலைக் குறைப்பு நாடகம் அம்பலப்படுத்திவிட்டது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**



இதுதொடர்பாகதிமுக தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "ஜனநாயக விரோத, மக்கள் விரோத ஒன்றிய பாஜக அரசை யாரும் எதிர்த்து நிற்க முடியாது என்று இண்டியா கூட்டணியின் முதல் கூட்டத்தை பாட்னாவில் உருவாக்கியபோது ஏளனம் பேசினார்கள். 'இது ஃபோட்டோ செஷன்' என்று நகையாடினார் ஒன்றிய உள்துறை அமைச்சர். நகையாடியவர்களின் கண்களில் பயமாடுவதை பெங்களூரு நகரில் நடந்த இண்டியா கூட்டணியின் இரண்டாவது கூட்டத்தில் காண முடிந்தது. அதன் பிறகு, இண்டியா கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பை மாநகரில் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும் அதில் மேலும் பல கட்சிகள் இணையும் என்றும் அறிவிக்கப்பட்டபோது, பாஜக அரசின் பயத்தின் விளைவை சமையல் கேஸ் சிலிண்டர் விலைக் குறைப்பு நாடகம் அம்பலப்படுத்திவிட்டது.

10 ஆண்டு காலமாக இந்தியாவை மதத்தின் பெயரால் பாழ்படுத்தி, கடும் விலையேற்றத்தால் மக்களை வதைத்து, அவரவர் தாய்மொழியையும் மாநில உரிமைகளையும் நசுக்கி, பன்முகத்தன்மை கொண்ட பண்பாட்டு உணர்வுகளை ஒடுக்கி, ஒரே நாடு – ஒரே மொழி – ஒரே தேர்தல் – ஒரே உணவு என்ற சர்வாதிகாரத்தனத்தை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக இண்டியா கூட்டணியில் இணைந்திருப்பவை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிற வாக்காளர்களும்தான். இந்த ஒற்றுமை உணர்வை ஒருமுகப்படுத்தி, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே, இந்திய ஒன்றியத்தைக் காப்பாற்றுவதற்கான வழி என்பதால் அதற்கான செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்துவதற்குப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுத் தங்கள் பணியை மேற்கொள்கின்றனர். இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாகத் திகழ்கிறது திமுக எனும் பேரியக்கம்.

சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7–ம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி, மாநில உரிமை, பன்முகத்தன்மை கொண்ட வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி. களத்தில் நாம் பெற்ற விழுப்புண்கள் அதிகம். கொடுத்த விலை இன்னும் அதிகம். ஆனால், எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, 'நான் திமுககாரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு' என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கட்சியினரின் அடையாளம்.

தலைவர் கருணாநிதியின் வழியில் இந்த ஆண்டும் கட்சியைக் காத்த லட்சிய வீரர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெரியார் விருது மயிலாடுதுறை சத்தியசீலனுக்கும், அண்ணா விருது மீஞ்சூர் க.சுந்தரத்துக்கும், கலைஞர் விருது கட்சியின் துணைப் பொதுச்செயலாளர், அமைச்சர் ஐ.பெரியசாமிக்கும், பாவேந்தர் விருது தென்காசி மலிகா கதிரவனுக்கும், பேராசிரியர் விருது பெங்களூரு ந.ராமசாமிக்கும் செப்டம்பர் 17 அன்று தீரமிக்க வேலூர் மாநகரில் நடைபெறவுள்ள கட்சியின் பவள விழாவுடன் கூடிய முப்பெரும் விழாவில் வழங்கப்படும். கட்சியின் வளர்ச்சிக்காக சிறப்பாக பாடுபடும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கான விருதுகளும் முப்பெரும் விழாவில் வழங்கப்பட இருக்கின்றன.

வீரம்செறிந்த வேலூரின் அடையாளமாக கோட்டை இருப்பதுடன், வேலூர் எப்போதும் திமுகவின் கோட்டைதான் என்பதைப் பல்வேறு களங்களில் நிரூபித்திருக்கிறது. கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் நமக்கு வழங்கியுள்ள கோட்டை. தனது மாணவப் பருவத்திலேயே மொழிப்போர்க் களம் கண்டு, அண்ணாவின் தம்பியாக, கருணாநிதியின் உடன்பிறப்பாக, அவரின் நிழலாக, கட்சியின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, கொள்கைத் தடம் மாறாமல் பயணிக்கின்ற பொதுச் செயலாளரின் தலைமையில் வேலூரில் முப்பெரும் திருவிழா, பவள விழா நடைபெறுகிறது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றிக்கு அச்சாரமிடும் வேலூர் முப்பெரும் விழாவுக்கு கொள்கைப் படையாகத் திரண்டு வருக. கழகம் காப்போம் – மொழியைக் காப்போம் – மாநில உரிமை காப்போம் – மக்கள் வாழும் வகையில் நாட்டைக் காப்போம் என்ற உறுதியைத் தருக. நாற்பதும் நமதே – நாடும் நமதே என்ற இலக்கை அடைந்திடச் சூளுரைக்கும் விழாவாக வேலூர் முப்பெரும் விழா அமையட்டும்", என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

---

# 2024 ஆம் ஆண்டு பாரதப் பிரதமராக மீண்டும் நரேந்திர மோடி பொறுப்பேற்பார்

### அரியலூரில் ஜி.கே.வாசன் தகவல்

அரியலூர், செப்.4–

வருகிற 2024 ஆம் ஆண்டு பாரதப் பிரதமராக, மீண்டும் நரேந்திர மோடி பொறுப்பேற்பார் என, அரியலூரில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில், ஜி.கே வாசன் கூறியுள்ளார்.



அரியலூர் வாணி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின், அரியலூர் மாவட்டத் தலைவர் எஸ்.ஆர் எம் குமார் என்கிற, நடராஜன் மகன் ராஜிவ் ராஜன்–அனிசா ஆகியோர், திருமண விழாவில் பங்கேற்பதற்காக வந்த, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன், செய்தியாளர்களிடம் பேசும்போது கூறியதாவது:

வளர்ச்சியான இந்தியா, பாதுகாப்பான இந்தியா வேண்டும் என, இந்திய மக்கள் நினைக்கிறார்கள். எனவே வருகிற 2024 பாராளுமன்ற தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி அறுதி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று, மூன்றாவது முறை பாரதப் பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்பார், அகில இந்திய அளவில், தேசிய ஜனநாயக கூட்டணியும், தமிழக அளவில் என்.டி.ஏ வில் உள்ளடங்கிய அதிமுகவும், பொது மக்களின் நம்பிக்கையை பெற்ற கட்சிகளாக செயல்படுகின்றன.

கடந்த இரண்டு மாதங்களில் நான், தமிழக முழுவதும் உள்ள 20 மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தொண்டர்களை சந்தித்துள்ளேன். அவர்கள் அனைவரும், இதே மனநிலையில்தான் உள்ளனர். பாரதிய ஜனதா கட்சி தலைவர் அண்ணாமலை நடத்தும் பாதயாத்திரை, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் கூட்டணியை வலுப்படுத்தும் வகையில் சிறப்பாக உள்ளது. திராவிட முன்னேற்ற கழகம் கடந்த சட்டமன்றத் தேர்தலில், பொதுமக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அதுவே எங்களது கூட்டணிக்கு மிகப்பெரிய வெற்றி வாய்ப்பாக உள்ளது. தமிழகத்தில் என் டி ஏ கூட்டணி, ஒத்த கருத்துடன் செயல்பட்டு வருகிறது. வளமான தமிழகம், வலிமையான பாரதம் என்கிற கோட்பாடுகளை நிறைவேற்றும் வகையில், பிரதமர் நரேந்திர மோடி செயல்பட்டு வருகிறார்.

தமிழகத்தில் நடைபெறும் திமுக ஆட்சியில், போதை மருந்து விற்பனை, நகை பறிப்பு, பாலியல் பலாத்காரம், சட்டம் ஒழுங்கு சீரழிவு உள்ளிட்ட பிரச்சனைகள் தான் தலை தூக்கி உள்ளன. காவல்துறை இதில் கண்டிப்போடு செயல்பட்டு, சட்டம் ஒழுங்கு செயல்பாடுகளை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஊழலற்ற நல்லரசாக, மக்கள் நலன் காக்கும் அரசாகவும், செயல்படும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி மூன்றாவது முறையாக மத்தியில் பொறுப்பேற்கும். அதன் மூலம் உலக அளவில் இந்தியாவை வல்லரசாக மாற்றுவதற்கு அடித்தளம் அமைக்கப்படும். இவ்வாறு ஜி.கே வாசன் பேசினார்.

பேட்டியின் போது அதிமுக அரியலூர் மாவட்ட செயலாளரும் முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன், தமிழ் மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் சுரேஷ் மூப்பனார், சுதாகர் மூப்பனார், திருச்சி குணா, கடலூர் நெடுஞ்செழியன், அரியலூர் எஸ் ஆர் எம் குமார் என்கிற நடராஜன், கீழப்பழுவூர் சுரேஷ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

---

### தமிழகத்தில் 4 நாட்களுக்கு

# பரவலாக மழை பெய்ய வாய்ப்பு வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை , செப். 4–**


தமிழகத்தில் 4 நாட்களுக்கு பரவலாக மழையும், ஒரு சில இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவல்: மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இன்று செப்.4ம் தேதி, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை செப்.5ம் தேதி, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாட்டத்தின் மலை பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

செப்.6ம் தேதி, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.



செப்.7ம் தேதி, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரையில் அடுத்த 48 மணி நேரத்துக்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மற்றும் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 – 28 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

சென்னையில், பகல் நேரங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்ட நிலையில், மாலை முதல் நகரின் பல்வேறு இடங்களில் விட்டுவிட்டு கனமழை பெய்தது. இதனால், வெப்பம் குறைந்து குளுமையான சூழல் நிலவியது. கனமழை காரணமாக, நகரின் முக்கிய சாலைகளில், மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், கருமேகங்கள் சூழ்ந்ததால், சாலையில் சென்ற வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்டபடி சென்றன. அண்ணாசாலை, கிண்டி, எழும்பூர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, தி.நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்தது. மேலும், ஆவடி, அம்பத்தூர், பூந்தமல்லி உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் நேற்று மாலை முதல் பல்வேறு இடங்களில் கனமழை பெய்ததது. இந்த திடீர் கனமழையால் பொதுமக்கள் சிரமத்துக்கு உள்ளாகினர்.

---

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்

# விண்ணப்பித்தவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று களஆய்வு செய்த கலெக்டர்

**புதுக்கோட்டை , செப். 4–**

புதுக்கோட்டை மாவட்டத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பத்தின் உண்மைத் தன்மை குறித்து கள ஆய்வு செய்யும் பணிகளை, புதுக்கோட்டை கலெக்டர் மெர்சி ரம்யா நேற்று மேற்பார்வையிட்டார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் 27.03.2023 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூக நீதித் திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக வரலாற்றில் விளங்கும் வகையில், மாதம் ரூ.1,000 வழங்கிடும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" ஏறத்தாழ ஒருகோடி குடும்பத்தலைவிகளுக்கு வழங்கப்படும் என தெரிவித்தார். அதனடிப்படையில், தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கிடும் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம்கள்; முதல் கட்டமாக 24.07.2023 முதல் 04.08.2023 வரை நடத்தப்பட்டதில் 2,54,090 நபர்களும் மற்றும் இரண்டாம் கட்டமாக 05.08.2023 முதல் 13.08.2023 வரையில் நடைபெற்ற முகாமில் 1,59,742 நபர்களும் மற்றும் 18.08.2023 முதல் 20.08.2023 வரையில் நடைபெற்ற சிறப்பு முகாமில் 10,902 நபர்களும் என ஆகமொத்தம் 4,24,734 நபர்களிடமிருந்து, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை 25.08.2023 முதல் வீடுவீடாகச் சென்று 07.09.2023க்குள் முடிக்கும் வகையில் தொடர்புடைய அலுவலர்களால் களஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் கள ஆய்வு மேற்கொள்ளவேண்டிய 1,16,741 விண்ணப்பங்களில் இதுவரை 99,772 விண்ணப்பங்கள் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, விண்ணப்பத்தாரர்கள் அளித்துள்ள தகவல்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், கள அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுப் பணிகள் மண்டல அலுவலர்கள் மூலம் செயலி உதவியுடன் மேற்பார்வையிடப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் புதுக்கோட்டை வட்டம் நகராட்சி, திருவள்ளுவர் 1ஆம் வீதி மற்றும் 2ஆம் வீதி உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியான நபர்கள் பயனடையும் வகையில் களஆய்வு பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என தெரிவித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்












புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வட்டார வள மையத்தில் புதிய பாரத கற்போம் மையங்கள் திறப்பு விழா மற்றும் தன்னார்வலர்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது, வட்டார வளமைய மேற்பார்வையாளர் தங்கமணி தலைமை வகித்தார் வட்டார கல்வி அலுவலர் கருணாகரன் முன்னிலை வகித்தார், திருவரங்குளம் வட்டாரத்தில் உள்ள 64 பள்ளிகளில் பாரத கருப்பு மையத்தில் பணிபுரியும் தன்னார்வலர்களுக்கு ஆசிரியர் பயிற்றுனர் மங்கையர்க்கரசி பயிற்சிகள் வழங்கினார், தன்னார்வலர்கள் பொது மக்களுக்கு பள்ளிக்கூடங்கள் சமுதாய கூடம், 100 நாள் வேலை செய்யும் பணியிடங்கள், தன்னார்வலர் இல்லங்கள் ஆகிய இடங்களில் என்ன அறிவு எழுத்தறிவு பெயர்கள் எழுதுதல் பேருந்து பேர்கள் படித்தால் குடும்ப பெயர்கள் எழுதுதல் கையொப்பம் இடுதல் தினமும் இரண்டு மணி நேரம் பயிற்சி செப்டம்பர் மாதம் முதல் பிப்ப்ரவரி மாதம் வரை 6 மாத காலங்கள் பயிற்சி வழங்கிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஊராட்சியிலும் அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் பயிற்சி மையங்களில் துவக்கி வைத்து கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது திட்ட ஒருங்கிணைப்பாளர் பாத்திமா நன்றி கூறினார் பயிற்சி முகாமில் தன்னார்வலர்கள் ஆசிரியர் பயிற்றுநர்கள் வட்டார வளமைய அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## 20 நாளுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் எட்டயபுரத்தில் தாகம் தீர்க்க தவிக்கும் மக்கள்



கோவில்பட்டி, செப். 4–
எட்டயபுரம் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இங்குள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய சீவலப்பேரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் தற்போது 20 நாட்களுக்கு ஒருமுறை தான் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் போதுமானதாக இல்லாததால், எட்டயபுரம் பேரூராட்சி பகுதி மக்கள் டேங்கர் மூலம் குடிநீர் விற்பனை செய்யும் வாகனங்களை நம்பியே உள்ளனர். எனவே, எட்டயபுரம்பேரூராட்சிக்கு என தனியாக குடிநீர் திட்டம் செயல்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதுகுறித்துமார்க்சிஸ்ட் மாவட்ட செயற்குழு உறுப்பினர் கு.ரவீந்திரன் கூறியதாவது: எட்டயபுரம் பேரூராட்சிபகுதிமக்களின் குடிநீர்தேவையை கருத்தில் கொண்டு 1974–ம் ஆண்டு ஆட்சியில் இருந்த திமுக தலைமையிலான அரசு சீவலப்பேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தை கொண்டு வந்தது. இந்த திட்டம் அப்போதிருந்த மக்கள் தொகைக்கு சரியாக இருந்தது.

ஆனால், காலப்போக்கில் மக்கள் தொகை எண்ணிக்கை அதிகரிக்கவே விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு போதுமானதாக இல்லை. இதையடுத்து கடந்த 2002–ம் ஆண்டு கயத்தாறு, கழுகுமலை, எட்டயபுரம், சாத்தூர் ஆகிய ஊர்களை இணைத்து புதிதாக சீவலப்பேரி கூட்டுக்குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டு 2004–ம் ஆண்டு செயல்பாட்டுக்கு வந்தது.

இதன்மூலம்எட்டயபுரம் பேரூராட்சிக்கு தினமும் 10 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கவேண்டும். ஆனால், அமலுக்கு வந்த நாள் முதல் இதுவரை முழுமையாக 10 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படவில்லை. குழாய்களில் அடிக்கடி ஆங்காங்கே உடைப்பு ஏற்படுவதால் சராசிரியாக 3 முதல் 4 லட்சம் லிட்டர் குடிநீர் தான் வழங்கப்படுகிறது. சீராக குடிநீர் கேட்டு 50–க்கும் மேற்பட்ட போராட்டங்களை நடத்தி உள்ளோம்.

இதற்கிடையே, குடிநீர் வடிகால் வாரியத்தை மட்டுமே நம்பி இருக்க வேண்டாம். ஊருக்குள் உள்ள நிலத்தடிநீரை பயன்படுத்துங்கள் என மாவட்ட நிர்வாகமும், குடிநீர்வடிகால்வாரியமும் அறிவுறுத்தியது. அதனை செயல்படுத்தும் விதமாக கடந்த 8 மாதங்களுக்கு முன்பு ஊருக்கு வெளியே பிதப்புரம் செல்லும் சாலையில் உள்ள பாண்டியன் கண்மாயில் 4 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டது.

அதிலிருந்து தண்ணீர் எடுத்து, சீவலப்பேரி குடிநீருடன் கலந்து விநியோகம் செய்யப்பட்டது. ஆனால், அந்த தண்ணீர் குடிக்க உகந்ததாக இல்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டினர். ஆழ்துளை கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரி தண்ணீரை தனித்தனியாக ஆய்வுக்கு அனுப்பியதில், 2 கிணறுகளை சேர்ந்த குடிநீரை அருந்தினால் சிறுநீரக கோளாறு உள்ளிட்ட உடல் உபாதைகள் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதனால் சீவலப்பேரி குடிநீர்மட்டும்20நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கும் டேங்கர்கள் வாகனங்கள் சுமார் 10 வரை எட்டயபுரம் நகரில் வலம் வருகின்றன. இந்த வாகனங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது. அதனை எவ்வாறு சுத்திகரிக்கின்றனர் என்பதை பேரூராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்யவில்லை.

சமீபகாலமாக எட்டயபுரம் நகரில் டைபாய்டு காய்ச்சல் பாதிப்புஅதிகமாகஉள்ளது. எனவே, எட்டயபுரம் நகருக்கெனதனியாககுடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசுநிதி ஒதுக்கிதுரிதமாக பணிகளை மேற்கொண்டு, மக்களுக்கு சீராக குடிநீர் வழங்க வேண்டும் எனக் கூறினார்.






### தடுப்புச் சுவர் இல்லாத பள்ளத்தாக்குகள்

## கொடைக்கானல் மலையில் பயணிகள் 'திக் திக்' பயணம்



கொடைக்கானல், செப். 4–
பழநி வழியாக கொடைக்கானல் செல்லும் மலைச் சாலையில் தடுப்புச்சுவர் இல்லாததால் பயணிகள் மிகுந்த அச்சத்தோடு பயணித்து வருகின்றனர்.

மலைகளின் இளவரசியான 'குளு குளு' கொடைக்கானல் செல்ல வத்தலகுண்டு மற்றும் பழநி வழியாக இரு பாதைகள் உள்ளன. இதில் பழநி வழியாக கொடைக்கானல் செல்லும் மலைப் பாதையில் தினமும் ஏராளமான வாகனங்கள் சென்று வருகின்றன. இந்தச் சாலையில் ஏராளமான அபாயகரமான வளைவுகள், பள்ளத்தாக்குகள் உள்ளன.

ஆபத்து நிரம்பிய இந்த மலைச்சாலையில் அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில், சில இடங்களில் தடுப்புச் சுவர்கள் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் பள்ளத்தாக்குகள் நிரம்பிய பகுதியில் தடுப்புச் சுவர்களே அமைக்கப்படவில்லை. இதனால் அந்த வழியாக செல்லும் சுற்றுலா வாகனங்கள் மிகுந்த கவனத்தோடு செல்ல வேண்டி உள்ளது.

குறிப்பாக, இரவு நேரங்களில் புதிதாக பயணிப்பவர்கள் விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது. விடுமுறை நாட்களில் இந்த வழியாகச் செல்லும் சுற்றுலா வாகனங்களின் எண்ணிக்கை மிக அதிகம். எனவே, அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையில் நெடுஞ்சாலைத் துறையினர் மலைச் சாலையில் சேதமடைந்துள்ள தடுப்புச் சுவர்களை சீரமைக்க வேண்டும். அபாயகரமான வளைவு, பள்ளத்தாக்கான பகுதியில் தேவைப்படும் இடங்களில் தடுப்புச் சுவர்களை அமைக்க வேண்டும். முக்கிய வளைவுகளில் வாகன ஓட்டுநர்களுக்கு தெரியும் வகையில் இரவு நேரங்களில் ஒளிரும் ஸ்டிக்கர்களை ஒட்ட வேண்டும். அபாயகரமான வளைவு, பள்ளத் தாக்குகள் குறித்து எச்சரிக்கை விழிப்புணர்வு பலகை வைக்க வேண்டும். சேதமடைந்த குவி கண்ணாடிகளுக்கு பதிலாக புதிய கண்ணாடிகளை பொருத்த வேண்டும் என சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து நெடுஞ்சாலைத் துறையினர் கூறுகையில், விரைவில் மலைச்சாலையில் சேதமடைந்த தடுப்புச் சுவர்கள் சீரமைக்கப்படும். தேவையான இடங்களில் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படும் என்றனர்.

## தமிழக அரசின் மாநில நல்லாசிரியர் விருது புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 ஆசிரியர்கள் தேர்வு

புதுக்கோட்டை, செப். 4–
தமிழக அரசின் மாநில நல்லாசிரியர் விருதுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளான செப்.5ம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் சார்பில் அன்றைய தினம் நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது என்னும் நல்லாசிரியர் விருதாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 ஆசிரியர்கள் நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய விருது தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் சென்னையில் நாளை செப்.5ம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் 2022–2023 ஆண்டிற்கான டாக்டர் இராதகிருஷ்ணன் விருது பெறும் 11 ஆசிரியர்கள் பல்வேறு தகுதிகள் அடிப்படையில் மாநிலத் தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விருது பெறும் ஆசிரியர்கள் விபரம் பின்வருமாறு, ஆவுடையார்கோயில் ஒன்றியம், பெரிய செங்கீரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் மு.காளிமுத்து, ஆவுடையார்கோயில் ஒன்றியம், தீயூர் ஆவணம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் சு.பாலு, அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் செ.ஜெயராஜ், அரிமளம் ஒன்றியம், கல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் ஆ.சாந்தி, அன்னவாசல் ஒன்றியம், கொத்தமங்கலப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் வீ.சரோஜா, அறந்தாங்கி அத்தாணி அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் கா.சேகர், குழிபிறை மு.சி.த.ராம.இராமநாதன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியின் முதுகலை ஆசிரியர் மா.செல்வமணி, புதுக்கோட்டை இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் மா.மதியழகன், திருமணஞ்சேரி அரசு உயர்நிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் வி.டைய்ட்டஸ், அறந்தாங்கி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் எம்.கவிதா, திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் இ.அபிராமசுந்தரி ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2022–2023 ஆண்டிற்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்களுக்கு 5ந்தேதி (செவ்வாய்கிழமை) அன்று சென்னை - 5 ,சேப்பாக்கம் கலைவாணர் அரங்கத்தில் அமைச்சர் பெருமக்களால் விருது வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆவுடையார்கோயில் அருகே கானூர் ஸ்ரீ பால சுப்பிரமணியர் ஆலய மஹா கும்பாபிஷேகம் திரளான பக்தர்கள் கோபுர தரிசனம் செய்தனர்

ஆவுடையார்கோயில், செப்.4–
புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில்அருகே கானூர்ஸ்ரீ பாலசுப்பிரமணிய திருக்கோயில் அமைந்துள்ளது, இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோயில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தன.



இதற்கென சிறப்பான யாகசாலை அமைத்து சனிக்கிழமை முதற்கால யாக பூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நாளான நேற்று இரண்டாம் காலயாக பூஜை நிறைவுற்று கடம் புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது, கடம் புறப்பாடானது மேளதாளங்களுடன் கோவிலை சுற்றிவலம்வந்தபின் கோபுர கலசத்தை அடைந்தது

சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கானூர் மற்றும் சுற்றுவட்டார ஆன்மீக மெய்யன்பர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் கோபுர தரிசனம் செய்தனர்.

கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது,நிகழ்ச்சியில் வழக்கறிஞர் விஸ்வநாதன், அமரடக்கி ஊராட்சி மன்றத் தலைவர் ராஜா மற்றும் ஊர்த் தலைவர் உட்பட ஊர் முக்கிய சித்தர்கள் முன்னிலையில் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கும்பாபிஷே நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## அக். 2–க்குள் மதுவிலக்கு அமல்படுத்தப்படாவிட்டால் மாநிலம் ஸ்தம்பிக்கும் போராட்டம் புதிய தமிழகம் கிருஷ்ணசாமி



*மதுரை, செப். 4–*
*அக்., 2ம் தேதிக்குள் பூரண மதுவிலக்கு அமல்படுத்தவில்லை என்றால், மாநிலம் ஸ்தம்பிக்கும் வகையில் போராட்டம் நடத்துவோம் என, புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.*

*மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர்கூறியது:"தமிழகத்தில் பூர்ண மதுவிலக்கு கோரி தொடர்ந்து மக்களிடம் விழிப்புணர்வு பிரசாரம் செய்கிறோம். எந்த மாநிலத்திலும் இன்றி தமிழ்நாட்டில் மக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் குடிப்பழக்கம் அதிகரித்துள்ளது. திமுக ஆட்சிக்கு வந்து 28 மாதமாகியும் குறைக்க, நடவடிக்கை இன்றி அதிகரிக்கவே நடவடிக்கை எடுக்கின்றனர். திண்டுக்கல் அருகே பிறந்த நாளையொட்டி 7 மாணவிகள் மது விருந்து அளித்துள்ளனர். இது போன்ற சம்பவம் மாணவர்கள் மத்தியில் ஊடுருவுகிறது. மதுவிலக்கு வலியுறுத்தி 100 பொதுக்கூட்டம் அறிவித்துள்ளோம். தொடர்ந்துநடத்துகிறோம். இன்று (நேற்று) திருச்சுழியில் நடந்தது. அக்.,2ல் மதுவிலக்கு அமல் இல்லையெனில் தமிழ்நாடு ஸ்தம்பிக்கும் வகையில் போராட்டம் நடத்துவோம். அதற்கான அறிவிப்பு வெளியிடப்படும்.*

*பள்ளி மாணவர்கள் மத்தியில் ஜாதிய மனப்பான்மை மேலோங்கியுள்ளது. நாங்குநேரியில் பள்ளி மாணவர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த காவல்துறை அனுமதி மறுக்கிறது. நீதிமன்றம் வரை சென்றாலும், மறுக்கும் காரணத்தை எழுத்துப்பூர்வமாக போலீஸ் அளிக்கவில்லை. இச்சம்பவத்தைக் கண்டித்து விசிக, சிபிஎம் போன்றகட்சிகள் அறிக்கை விட்டனவே தவிர, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை. கூட்டணியில்இருப்பதால் கண்டிக்காமல் விடுவது நியாயமல்ல. நாங்குநேரி பகுதியில்கோயில்களிலும் தீண்டாமை நடக்கிறது. கோயில், மடாதிபதிகள் பெயரிலுள்ள நிலங்கள் விற்கப்படுவதை தடுத்து, அந்நிலங்களை அரசு கையகப்படுத்திவிவசாயம் செய்யும் ஏழைகளுக்கு வழங்க வேண்டும். 40 சதவீத மக்களை வறுமையில் வைக்கவே ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர். சமூகநீதி மட்டும் பேசாமல் அதை செயல்படுத்தவேண்டும்.*

*ஒரேநாடு,ஒரேதேர்தல் முறையை கட்டாயம் அமல்படுத்தவேண்டும். நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே தவலியுறுத்துகிறோம். நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தவேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்பதை மாற்றி, 4 ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலில் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதித்துவம் தேவை. அப்போது, தான் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து கேள்வி கேட்க முடியும். சனாதனம்பற்றி அமைச்சர் உதயநிதி பேசுகிறார். நாங்குநேரி விவகாரத்தில் அவர் என்ன செய்தார். முதலில் சமூக நீதியை நிலைநாட்டிவிட்டு அவர் சனாதனம்பேசவேண்டும். தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள 62 சுங்கச்சாவடிகளில் 60 ஆந்திரா, மும்பை ஏஜன்சிகளால் நடத்தப்படுகின்றன. 32 சுங்கச்சாவடிகள் காலாவதியான பிறகும் தொடர்ந்து செயல்படுகின்றன. இதன்மூலம் வசூலிக்கும் தொகை யாருக்கு செல்கிறது.*

*தமிழ்நாட்டில் தினமும் சுமார் 1 லட்சம் வாகனங்கள் புதிதாக வாங்கப்படுகின்றன. இவற்றின் மூலமும் சுங்கச்சாவடிகளில் வருவாய் அதிகரித்துள்ளது. சுங்கச்சாவடி செயல்பாடு குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிடவேண்டும். அனைத்து சுங்கச்சாவடிகளையும் மூடவேண்டும். இது போன்றபிரச்னை குறித்து தமிழகத்திலுள்ள எம்.பிக்கள்நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பதில்லை. எஞ்சிய நாளிலாவது எழுப்பவேண்டும். ஆடு, மாடு வளர்ப்போரின் குழந்தைகளேநீட் தேர்வுக்கு தயாராகிவிட்டார்கள். திமுகமட்டும்அத்தேர்வை சொல்லி மக்களை ஏமாற்றுகிறது. எம்.பி தேர்தலுக்கான இண்டியா கூட்டணியைவிட, நாங்கள் தான் உண்மையான இந்தியா கூட்டணி.'' இவ்வாறு டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார்.*

## அரியலூர் மின் நகரில் சுப்பிரமணியர் கோயில் கும்பாபிஷேகம்

*அரியலூர்,செப்.4–*
*அரியலூர் மின் நகரில் சுப்பிரமணியர் கோயில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.*



*அரியலூர் -வாலாஜா நகரம்ஊராட்சிக்குட்பட்ட மின் நகரில் உள்ள, ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீ பூரண கலா சமேத ஐயனார், நவக்கிரகங்கள் மற்றும் காட்டேரி அம்மன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு, அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.*

*விநாயகர் வழிபாடு மற்றும் யாகசாலை பூஜைகளுடன் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவை, பெரிய திருக்கோணம் ஹரிஹர சிவம் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தி வைத்தனர். அரியலூர் நகரம், மின் நகர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பலரும், கும்பாபிஷேக விழாவில் பங்கேற்றனர். கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை, ஆலய கும்பாபிஷேக கமிட்டி நிர்வாகிகள் செய்தனர்*

# பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தலை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் கோரிக்கை





ஊத்துக்கோட்டை, செப்4–

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், சிறுபுழல்பேட்டை ஊராட்சியைச் சேர்ந்தவரும், எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட துணைச் செயலாளருமான ஸ்ரீவிஜயன், சிறுபுழல்பேட்டை 1-வது வார்டு உறுப்பினர் வி.பவித்ரா தம்பதியரின் மகன் வி.சாருகேஷ், மகள் வி.ஷமிதா ஆகியோரின் காதணி விழா நிகழ்ச்சி இந்த ஊராட்சியில் உள்ள முனுசாமி தாத்தா திருக்கோவிலில் நேற்று நடைபெற்றது.**

இதன் பின்னர், மதிய விருந்து உபசரிப்பு நிகழ்ச்சி கும்மிடிப்பூண்டி, பெத்திகுப்பம்கேட் அருகே உள்ள பிரேமசேஷ மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் வடக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளரும், எல்லாபுரம் ஒன்றிய கழகச் செயலாளருமான கே.எஸ். விஜயகுமார் தலைமை தாங்கினார்.

கும்மிடிப்பூண்டி ஒன்றிய பெருந்தலைவர் கே.எம்.எஸ். சிவக்குமார், கும்மிடிப்பூண்டி பேரூர் அவைத்தலைவர் முகசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், தமிழக முன்னாள் மீன்வளத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார், திருவள்ளூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறுணியம் பி.பலராமன் ஆகியோர் கலந்து கொண்டு வி.சாருகேஷ், வி.ஷமிதா ஆகியோரை வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியில், எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் பி.டி. பானுபிரசாத், ஐ.டி.விங் மாவட்ட செயலாளர் இமயம் மனோஜ், ஆரணி பேரூர் கழகச் செயலாளர் ஏ.எம்.தயாளன், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர்கள் ஜே.ரமேஷ்குமார், சுகுமார், ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.டி.நாகராஜ், ஒன்றிய கவுன்சிலர் தேவிசங்கர், கும்மிடிப்பூண்டி அம்மா பேரவை செயலாளர் ஓடை ராஜேந்திரன், ஆரணி பேரூர் கழகப் பொருளாளர் மா.சேகர், ஆரணி அம்மா பேரவை செயலாளர் கே.என்.சீனிவாசன், விவசாய பிரிவு செயலாளர் கே.டில்லி, முன்னாள் பாசறைச் செயலாளர் பா.துளசி, ஏ.சி. வெங்கடேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகளும், சார்பு அணியை சேர்ந்த நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்குப் பின் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது: தமிழக அரசு தேர்தல் வாக்குறுதியில் கூறியவற்றை நிறைவேற்றாததால் தமிழக மக்கள் திமுகவின் மீது அதிருப்தியில் உள்ளனர். குறிப்பாக பெண்களுக்கு மாதம்தோறும் சிலிண்டருக்கு மானியம் வழங்காதது, கல்வி கடனை முழுமையாக ரத்து செய்யாதது, அனைத்து பெண்களுக்கும் தலா ரூ.1,000-ம் வழங்காதது, பெட்ரோல்-டீசல் விலையை ஜி.எஸ்.டி-க்குள் கொண்டு வராதது உள்ளிட்டவைகளால் தமிழக மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தங்களது எதிர்ப்பை தெரிவிக்க காத்துக் கொண்டுள்ளார்கள்.

மேலும், 1991-ம் ஆண்டு பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல் ஒரே நேரத்தில் நடைபெற்றது. அதேபோன்று 2024-ம் ஆண்டு பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல் நடக்க வேண்டும். அதற்கான சூழ்நிலை தமிழகத்தில் நிலவுகிறது என்று கூறினார்.

## ஐதராபாத் விமான நிலையத்தில்

# ₹50 கோடி 'கோகைன்' போதை பொருள் பறிமுதல், 4 பெண்கள் கைது



திருமலை:செப்,4

டெல்லியில் இருந்து தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள ஷம்ஷாபாத் விமான நிலையத்திற்கு நேற்று மாலை ஒரு விமானம் வந்தது. இந்த விமானத்தில் இருந்து பயணிகள் இறங்கி வந்தனர். அவர்களையும் அவர்கள் கொண்டு வந்த பை உள்ளிட்ட உடமைகளையும் புலனாய்வு அதிகாரிகள் வழக்கம்போல் சோதனை செய்தனர்.

அப்போது 4 பெண் பயணிகள் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால் அந்த 4 பெண்கள் கொண்டு வந்த பைகளை தீவிரமாக சோதனை செய்தனர். இதில் 4 பைகளில் 5 கிலோ கோகைன் என்ற போதைப்பொருள் கடத்தி வரப்பட்டது தெரியவந்தது. இவற்றின் மதிப்பு சுமார் ₹50 கோடி என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் கோகைனை பறிமுதல் செய்த அதிகாரிகள் அவர்கள் 4 பேரிடம் விசாரணை நடத்தினர். அதில், தென்கிழக்கு ஆசியாவின் லாவோஸ் நகரில் இருந்து போதைப்பொருள் கடத்தி வந்தது தெரியவந்தது.

மேலும் லாவோஸ் நகரில் இருந்து நேரடியாக ஐதராபாத்துக்கு விமானத்தில் வந்தால் பிடிபட்டு விடுவோம் எனக்கருதி லாவோஸில் இருந்து சிங்கப்பூருக்கு சென்று, அங்கிருந்து டெல்லிக்கும், டெல்லியில் இருந்து ஐதராபாத் வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து 4 பேரையும் கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஷம்ஷாபாத் விமான நிலையத்தில் ₹50 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் கடத்தி வந்த 4 பேர் கைதான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது டெல்லி போலீசார் 4 பிரிவுகளின் வழக்குப் பதிவு!



புதுதில்லி: செப்,4

சென்னை தேனாம்பேட்டையில் நடைபெற்ற சனாதன தர்ம ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சில விஷயங்களை எதிர்க்க முடியாது, ஒழிக்க தான் வேண்டும். கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா போன்றவற்றை ஒழிக்கத்தான் வேண்டும், எதிர்க்க முடியாது.

அதேபோன்று தான் சனாதனமும். அதை எதிரிக்கக் கூடாது, ஒழிக்க வேண்டும். சனாதனம் சமத்துவத்திற்கும், சமூகநீதிக்கும் எதிரானது. எதுவுமே நிலையானது கிடையாது. அனைத்தையும் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்கு உருவான இயக்கம்தான் கம்யூனிஸ்ட், திமுக என உதயநிதி ஸ்டாலின் பேசினார். இது குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து உதயநிதி பேச்சுக்கு பாஜகவினர் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆனால் அதே நேரத்தில் பல கட்சியினரும் பெரும்பாலான பொதுமக்களும் உதயநிதி பேச்சுக்கு ஆதரவும் தெரிவித்து உள்ளனர்.

இந்தநிலையில், வழக்கறிஞர் வினித் ஜிண்டால் டெல்லி காவல்துறையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது புகார் அளித்துள்ளார். புகார் மனுவில், இந்தியாவின் பலர் பேர் சனாதன தர்மத்தில் நாட்டம் கொண்டவர்கள். இவர்களை இனப்படுகொலை செய்யத் தூண்டும் வகையில் உதயநிதி ஸ்டாலின் பேச்சு அமைந்துள்ளது. எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் மீது இந்திய தண்டனைச் சட்டம் 120பி, 153ஏ, 295, மற்றும் 504 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சென்னை, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி கிராமம் பகுதியில்

# அருள்மிகு ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீனிவாச சுவாமி மற்றும் ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் ஆலய ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம்



*சென்னை, செப். 4–*

*சென்னை, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி கிராமம் பகுதியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீனிவாச சுவாமி மற்றும் ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன நூதன மகா கும்பாபிஷேகம் சோபகிருது வருடம், ஆவணி மாதம் சதுர்த்தி திதியும், ரேவதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் சிம்ம லக்னத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.*

*ஆலய விமானம் மற்றும் ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீனிவாச சுவாமி, உத்ஸவ மூர்த்தி மற்றும் ஸ்ரீ பக்த ஆஞ்சநேய சுவாமி ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் மற்றும் ஸ்ரீ யோக நரசிம்மர் சுதர்சனர் சுவாமிக்கு நூதன உத்ஸவ மூர்த்தியுடன் மகா ப்ரதிஷ்டை ஸ்ரீ திவ்ய வைகானஸ பகவத் சாஸ்திர முறைப்படி நடைபெற்றது. மூலவர் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து, மகா அபிஷேகம், அபிஷேக ஆராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 11.30 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.*

*அதனையடுத்து காலை 9.00 மணி முதல் 11.00 மணிக்குள் திருக்கல்யாணம் நிகழ்ச்சியும், மாலை 3.00 மணிக்கு கோபாலசுந்தர பாகவதரின் சிறப்பு நாம சங்கீர்த்தனமும் இரவு 7.00 மணிக்கு திருவீதி உலாவும் நடைபெற்றது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் எம். ரவி, கே.கோவிந்தராஜ், ஜெ.கோபாலகிருஷ்ணன், எம்.பார்த்தசாரதி ஆகியோருடன் இணைந்து கும்பாபிஷேக விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.*





**▶ சென்னை, சாலிகிராமம், விஜயராகவபுரம் பகுதியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ ஓம் சக்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நிகழும் சோபகிருது வருடம், ஆவணி மாதம் சதுர்த்தி திதியும், ரேவதி நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் துலா லக்னத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. விமான கும்பாபிஷேகம், மூலவர் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து, மகா அபிஷேகம், அபிஷேக ஆராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. அதனையடுத்து மாலை 5.00 மணிக்கு விசேஷ அலங்காரமும், தீபாராதனையும் மாலை 6.00 மணிக்கு ஊஞ்சல் உற்சவமும் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகி எஸ்ஆர்எம்.ரவி மற்றும் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.**

# சிறுவாபுரியில் நடைபெற்ற 11–ம் ஆண்டு திருக்கல்யாண மகோத்சவத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, செப்4–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அருகே சின்னம்பேடு என்றழைக்கப்படும் சிறுவாபுரியில் புகழ்பெற்ற ஸ்ரீபாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு, தொடர்ந்து ஆறு வாரங்கள் வந்து நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் திருமண தடை, பிள்ளை பேரு, உத்தியோகம், வீடு-மனை உள்ளிட்ட வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

இந்நிலையில், இக்கோவிலுக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.1.25 கோடி செலவில் மகா கும்பாபிஷேகமும், அதைத்தொடர்ந்து 48 நாட்கள் மண்டலபிஷேக நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. இக்கோவிலில் ஆண்டுதோறும் சென்னை அண்ணாமலையார் ஆன்மீக வழிபாட்டு குழு சார்பில் வள்ளி மணவாள பெருமானுக்கு திருக்கல்யாண மகோத்சவத்தை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை 11-ம் ஆண்டாக திருக்கல்யாண மகோத்சவத்தை நடத்தினர். இதை முன்னிட்டு நேற்று காலை 6 மணிக்கு விநாயகர், ஆதிமூலவர், அண்ணாமலையார், உண்ணாமலை அம்மனுக்கு அபிஷேகமும், 7 மணிக்கு மூலவருக்கு பால், தயிர், பன்னீர், இளநீர் மற்றும் பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் நடைபெறது. பின்னர், மூலவருக்கு கல் நகை அலங்காரம் நடைபெற்றது. இதன் பின்னர், வள்ளி மணவாள பெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து ஆனந்தன் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் வள்ளிமணவாள பெருமானுக்கு திருக்கல்யாண வைபவத்தை நடத்தி வைத்தனர். பின்னர், சுவாமி மங்கள வாத்தியம், கைலாய வாத்தியம் முழங்க ஆறு முறை கோவில் பிரகாரத்தை சுற்றி வந்தது. இதன் பின்னர், திருமணம் ஆகாத பெண்கள் கொண்டு வந்து கொடுத்த மாலையை முருகப்பெருமானுக்கு அணிவித்து கொடுத்தனர். திருமணம் ஆகாத ஆண்கள் கொண்டு வந்து கொடுத்த மாலையை வள்ளிக்கு அணிவித்து கொடுத்தனர். அவ்வாறு கொடுத்த மாலையை அணிந்து கொண்டு அந்த பக்தர்கள் கோவிலில் ஆறு முறை பிரகாரம் சுற்றி வந்து மூலவரை தரிசித்தனர். இதன் பின்னர், மகா தீபாராதனை நடைபெற்றது.

பின்னர், பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. திருக்கோவிலுக்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் கோவில் அருகே அமைக்கப்பட்டு இருந்த பந்தலில் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் மற்றும் ஊழியர்களும், பணியாளர்களும், அண்ணாமலையார் ஆன்மீக வழிபாட்டு குழுவினரும் சிறப்பாக செய்திருந்தனர். திருக்கல்யாண வைபவத்தில் கலந்து கொள்ள சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்தனர். திருமண தடை நீங்க கோரி 500-க்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் பக்தர்கள் திருக்கல்யாண உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

## காரைக்கால் வருகை தந்த அமைச்சர் நமச்சிவாயத்திடம்

# டெல்டா விவசாயிகள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்



*காரைக்கால், செப். 4–*

*பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள காரைக்கால் வருகை தந்த உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்திடம் காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்க நிறுவனர். கேசவன், தலைவர் ராஜேந்திரன், துணை தலைவர் ஷேக் முகமது, இணை செயலாளர் சோமு, செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகம், ஆரோக்கியதாஸ், ஆகியோர் சந்தித்து கிழ் கண்ட கோரிக்கைகளை முன் வைத்து முடிவு காண கேட்டு கொண்டனர்.*

*கடந்த 2020-2021. ஆண்டு உரிய பயிர் காப்பீட்டுத் இழப்பீட்டு தொகையில் 437 விவசாயிகளுக்கு கொடுக்க படாமல் விடுபட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தும் அரசு வழக்கறிஞரால் விவசாயிகள் அனைவருக்கும் உரிய பயிர் காப்பிட்டு இழப்பீடு தொகை கொடுக்கப்பட்டு விட்டது எனக்கூறியதால் மேற்கண்ட வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது எனவே விடுபட்டுள்ள 437 விவசாயிகளுக்கும் உரிய பயிர் காபிட்டு இழப்பீடு தொகையை பெற்று தர வேண்டும்*

*புதுச்சேரி முதல்வர் இரண்டு முறை சட்டசபையில் அறிவித்தும் கூட்டுறவு சங்க கடன்கள் தள்ளுபடி செய்யபடவில்லை. எனவே தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் விவசாயிகள் கடன் பெற முடியாத அவல நிலையில் உள்ளோம் எனவே அமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் வலியுறுத்தியுள்ளனர்.*

# கீழப்பெரும்பள்ளத்தில் கைலாசநாதர் கோவில் உட்பட ஒரே நேரத்தில் ஏழு கோவில்களில் கும்பாபிஷேகம்





தரங்கம்பாடி, செப்-04:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, கீழப்பெரும்பள்ளத்தில் உள்ள பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த ஸ்ரீ மனோன்மணி சமேத கைலாசநாதர் கோவில் உட்பட ஏழு கோவில்களுக்கு ஒரே நேரத்தில் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு விக்னேஸ்வர பூஜை, கோ பூஜை, கஜ பூஜை, அஸ்வ பூஜை, பிம்பசுத்தி ரக்ஷா பந்தனன், நாடி சந்தானம், தத்துவச்சாரணை, ஸ்பரிசாஹூதி, திரவியாஹூதி, மகாபூர்ணாஹூதி, யாத்ரா தானம், கிரகப்பிரிதி அனைத்து ஆலயங்களுக்கும் சிவாச்சாரியார்கள் புனித நீர் அடங்கிய கடன்கள் சுமந்து ஊர்வலமாக புறப்பட்டு ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில், ஸ்ரீ சீதலா தேவி மாரியம்மன், ஸ்ரீ மன்மத சுவாமி கோயில், ஸ்ரீ கூந்தாளம்மன் கோயில், ஸ்ரீ லட்சுமி நாராயண பெருமாள் ஆலயம், ஸ்ரீ கைலாசநாதர் ஆலயங்களுக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்து மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து ஆச்சாரிய உற்சவம், எஜமானும் உற்சவம், அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் உள்ளிட்ட 2-ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்திற்கான திருப்பணிகளை மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாக குழுத்தலைவரும், மாவட்ட திமுக துணைத்தலைவருமான மு. ஞானவேலன் செய்திருந்தார்.

# சென்னையில் அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம்



*சென்னை, செப். 4–*

சென்னை, ஈக்காட்டுத்தாங்கல், ஜோதி நகர், 2வது தெரு பகுதியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் சோபகிருது வருடம், ஆவணி மாதம் சதுர்த்தி திதியும், ரேவதி நட்சத்திரமும், அமிர்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் துலாம் லக்னத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

விமானம் மற்றும் ஸ்ரீ ஜோதி விநாயகர், அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ராம நந்தீஸ்வரர் கைலாய வாத்தியம் மற்றும் மங்கள இசையுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூலவர் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து, மகா அபிஷேகம், அபிஷேக ஆராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அதனையடுத்து மாலை 7.00 மணிக்கு அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி சிறப்பு அலங்காரத்துடன் திருவீதி உலா நடைபெற்றது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகி பழனி, கும்பாபிஷேக விழா குழுவினருடன் இணைந்து ஈகை ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில் அறக்கட்டளையினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# அந்தமானில் மோசமான வானிலை, சென்னை திரும்பிய விமானம் பயணிகள் இன்று பயணிக்க ஏற்பாடு

சென்னை, செப்,4

சென்னை விமானநிலையத்தின் உள்நாட்டு விமான முனையத்தில் இருந்து நேற்று அதிகாலை அந்தமானுக்கு 156 பயணிகளுடன் இன்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட்டு சென்றது. அந்தமானில் மோசமான வானிலை காரணமாக அந்த விமானம் தரையிறங்க முடியாமல், நீண்ட நேரம் வானிலேயே வட்டமடித்தபடி இருந்தது. எனினும், அங்கு வானிலை சீரடையாததால் அந்த விமானம் தரையிறங்க முடியாமல் தத்தளித்து கொண்டிருந்தது. இதுகுறித்து விமானத்தின் தலைமை விமானி, சென்னை விமானநிலைய கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, அந்தமானில் தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்தபடி இருந்த இன்டிகோ பயணிகள் விமானத்தை மீண்டும் சென்னைக்கு திருப்பி கொண்டு வரும்படி சென்னை விமானநிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதையடுத்து, அங்கு தரையிறங்க முடியாமல் தத்தளித்த இன்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் நேற்று காலை 10.30 மணியளவில் மீண்டும் சென்னை உள்நாட்டு விமான முனையத்துக்கு வந்து தரையிறங்கியது. இதைத் தொடர்ந்து இன்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளும் இறக்கப்பட்டு விமானநிலைய ஓய்வறையில் தங்கவைக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, நேற்று அந்தமான் செல்ல வேண்டிய விமானம் ரத்து செய்யப்பட்டு உள்ளது. இந்த விமானம் நாளை (இன்று) அந்தமான் புறப்பட்டு செல்லும். இதே விமான டிக்கெட்டில் அனைத்து பயணிகளும் நாளை (இன்று) பயணம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. இதற்கிடையே ஒருசில பயணிகள், நேற்று கொல்கத்தா செல்லும் விமானத்தில் அனுப்பி வைக்கும்படி கூறினர். அவர்களை கொல்கத்தா அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன*

# களக்குடி உமாமகேஸ்வரி சமேத ஸ்ரீ உமாமகேஸ்வரர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் : திரளான பக்தர்கள் கோபுர தரிசனம் செய்தனர்



அறந்தாங்கி, செப்.4-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே களக்குடி கிராமத்தில் உமாமகேஸ்வரி சமேத ஸ்ரீ உமாமகேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது, இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோயில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தன.

இதற்கென சிறப்பான யாகசாலை அமைத்து வெள்ளிக்கிழமை , முதற்கால யாக பூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கியது, பின்னர் நான்காம் காலயாக பூஜை நிறைவுற்று கடம் புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது, கடம் புறப்பாடானது மேளதாளங்களுடன் கோவிலை சுற்றி வலம்வந்தபின் கோபுர கலசத்தை அடைந்தது. சீனுவாச சுவாமிகள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, களக்குடி மற்றும் நாகுடி சுற்றுவட்டார ஆன்மீக மெய்யன்பர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் கோபுர தரிசனம் செய்தனர், கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக "தனித்திரு" தனித்துவமிக்க ஆளுமை பயிற்சி!



புதுக்கோட்டை,செப்.4-

புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக செப்டம்பர் மாத அறம் சிறப்பு திட்டம் தனித்திரு என்ற தலைப்பில் பெண்களுக்கான தனித்துவமிக்க ஆளுமை பயிற்சி உதவி தலைமை ஆசிரியர் ராஜ்நாராயணன் தலைமையில் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. முன்னதாக வருகை தந்த அனைவரையும் புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க தலைவர் அசோகன் வரவேற்றார் ரோட்டரி மாவட்டம் 3000தின் துணை ஆளுநர் ஜெயக்குமார், மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் செனட் உறுப்பினர் காசிநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார், JCI மண்டல பயிற்சியாளரும், குழிபிறை ஊராட்சி மன்றத் தலைவருமான அழகப்பன் சிறப்பு பயிற்சியாளராக கலந்து கொண்டு மாணவிகளுக்கு தலைமை பண்பு பற்றிய பயிற்சி அளித்தார், நிகழ்ச்சியில் சங்க ஆலோசகர் கண.மோகன்ராஜா, செயலாளர் முத்தன் அரசகுமார், உடனடி மேனாள் தலைவர் R.சிவக்குமார் திட்ட இயக்குனர்களாக நடத்தினார்கள் நிகழ்ச்சியில் உதவி தலைமை ஆசிரியர் காந்தி, முதுநிலை புவியியல் ஆசிரியர் தங்கமணி, பொறியாளர் ஓம்ராஜ், முகமது அப்துல்லா, ஆரவமுதன். தயாளன், அன்பழகன், செல்வகுமார், யோகேஸ்வரன், அருளானந்தம், நாகரத்தினம், சேது கார்த்திகேயன் மற்றும் ஆசிரியர்கள் மாணவிகள் 105பேர் கலந்துகொண்டனர் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது, நிறைவாக பொருளாளர் சங்கர் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# முல்லைப்பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் 70% நிறைவடைந்துள்ளன மதுரை மாநகராட்சி தகவல்



மதுரை , செப்.4-

முல்லைப்பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் 70% நிறைவடைந்துள்ளதாக மதுரை மேயர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி ஒட்டுமொத்தமாக குடிநீர் தேவைக்கு வைகை அணையை மட்டுமே நம்பியிருக்கிறது. அணையில் தண்ணீர் குறைந்தால் மதுரை மக்களுடைய குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் மாநகராட்சிக்கு நெருக்கடி ஏற்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளாக கோடைக்கால மழையும், பருவமழையும் ஓரளவு பெய்து விட்டதால் குடிநீர் பற்றாக்குறை வெளியே தெரியவில்லை. இதே நிலை எப்போதும் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. அதனால், கடந்த அதிமுக ஆட்சியில் மதுரை மாநகராட்சியில் குடிநீர் பற்றாக்குறையை நிரந்தரமாக போக்குவதற்கு ரூ.1,653.21 கோடியில் பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் இந்த திட்டத்தை 2021ம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டது. ஆனால், நிதி ஒதுக்கீடு, டெண்டர் விடுவதில் தாமதம், கரோனா தாக்கம் போன்றவற்றால் இந்த திட்டம் தாமதமாகவே தொடங்கியது. தற்போது திமுக ஆட்சியில் பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டம் டிசம்பரில் முடித்து மதுரை மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது. ஆனால், தற்போது 70 சதவீதம் பணிகளே முடிந்துள்ளதால் மதுரை மக்களுக்கு டிசம்பரில் பெரியாறு குடிநீர் கிடைக்க வாய்ப்பில்லை என்ற தகவல் தெரிய வந்துள்ளது.

தற்போது பகுதி-1, பகுதி-2 திட்டப்பணிகளில் 70 சதவீத பணிகள் முடிந்துள்ளன. பகுதி-3ல் 60 சதவீதம் பணிகளே முடிந்துள்ளன. பகுதி-1ல் லோயர் கேம்ப் பகுதியில் இருந்து பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் வரை குழாய் பதிக்கும் பணியில் சிறுசிறு இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தனியார் ஆக்கிரமிப்பை அகற்றுவது, வனத்துறை, மாநில நெடுஞ்சாலைத்துறை, தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆகியவற்றின் ஒப்புதல் கிடைப்பது போன்றவற்றில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால், கடந்த வாரம் முல்லைப்பெரியாறு குடிநீர் திட்டப்பணிகளை ஆய்வு செய்து விரைவுப்படுத்துவும், அங்குள்ள சிக்கல்களை ஆராய்ந்து முடிவெடுக்கவும் மேயர் இந்திராணி அதிகாரிகள் குழுவுடன் தேனி மாவட்டம் சென்றுள்ளார்.

இந்த சிக்கலைளை தீர்க்கவும், தேனி மாவட்டத்தில் இந்த குடிநீர் திட்டங்களுக்கு அரசு துறைகளின் ஒப்புதல் பெறவும் விரைவான நடவடிக்கை எடுக்க தேனி மாவட்ட ஆட்சியரை சந்தித்து அவர் முறையிட்டுள்ளார். மாநகராட்சி மேயர் தரப்பில் கேட்டபோது, ''ஒட்டுமொத்தமாக 70 சதவீதம் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. டிசம்பரில் லோயர் கேம்ப் பகுதியில் இருந்து மதுரை பை-பாஸ் ரோடு வரை குழாய் பதித்து பணிகள் நிறைவேற்றப்படும். அதன்பின் நகர்பகுதியில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிகள்தான் பாக்கியிருக்கும். அதை முடித்து அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் வெள்ளோட்டம் பார்த்து, இந்த திட்டம் தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்படும்" என்றனர்.

# உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பில் அரியலூர் அருகே கயர்லாபாத் கிராமத்தில் இலவச மருத்துவ முகாம்



அரியலூர்,செப்.4-

உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பில், அரியலூர் அருகே கயர்லாபாத் கிராமத்தில் மருத்துவ முகாம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம் கயர்லாபாத் கிராமத்தில், உலக திருக்குறள் கூட்டமைப்பு மற்றும் அரியலூர் சாந்தி மருத்துவமனை இணைந்து நடத்திய, மாபெரும் இலவச மருத்துவ முகாம், சாந்தி மருத்துவமனை நிர்வாக இயக்குனர் எஸ். வி சாந்தி தலைமையில் நடைபெற்றது. மருத்துவ முகாமை ஊராட்சி மன்றத் தலைவர் சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார். மருத்துவ முகாமில், கிராம பொது மக்களுக்கு ரத்த சர்க்கரை, ரத்த அழுத்தம், எலும்பு உறுதித் தன்மை சோதனை, இதய பரிசோதனை மற்றும் பொது உடற்பரிசோதனை ஆகியவற்றை நடத்தி, இலவச மருத்துவ ஆலோசனையை மருத்துவர்கள் நாகராஜன், அரவிந்தராஜ் , அபிராமி ஆகியோர் வழங்கினார்கள்.

மேல்சிகிச்சை தேவைப்படுவோருக்கு உரிய வழிகாட்டுதலும், ஆலோசனையும் வழங்கப்பட்டன. முகாமில் உலக திருக்குறள் கூட்டமைப்பு மாநில துணைப் பொதுச் செயலாளர் சௌந்தரராஜன், மற்றும் நிர்வாகிகள் இளங்கோ, ரமேஷ், செவ்வேள், இளவரசன், செல்ல பாண்டியன், சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், மருத்துவ முகாமில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உடற்பரிசோதனை செய்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டம்- திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணி அமைப்பாளராக இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி லெப்பை குடியிருப்பு அலெக்ஸ் அப்பாவு-வை நியமனம் செய்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும், நெல்லை மாவட்டதிமுக செயலாளர் ஆவுடையப்பனுக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார். நிகழ்ச்சியில் மதிமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு.சங்கர் பணகுடி, நெல்லை வாகையடி முக்கு பழனி, அலெக்ஸ் அப்பாவுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர், மேலும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.




சென்னை, அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் சமூக நீதிக் கண்காணிப்பு குழுவும், பொது நூலகத் துறையின் சென்னை நூலக ஆணைக்குழுவும் இணைந்து நடத்திய கலைஞர் நூற்றாண்டு விழாவினை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, சென்னை மாநகர நூலக ஆணைக்குழு தலைவர் மனுஷ்யபுத்திரன், சமூக நீதிக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் குழுத் தலைவர் சுப. வீரபாண்டியன், சமூக சீர்திருத்தத் துறை செயலாளர் த. ஆபிரகாம், பொது நூலகத்துறை இணை இயக்குநர் அமுதவல்லி, துணை இயக்குநர் இளங்கோ சந்திரகுமார், சென்னை மாநகர வாசிப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர் கோ.ஒளிவண்ணன், ரோட்டரி லெஜன்ட் உறுப்பினர் குமார் ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ரத்தினகிரி சிஎம்சி வளாகத்தில் காப்பீட்டு திட்டத்தின் கீழ் முக்கிய சிகிச்சைகள் பெற முடியாமல் தவிக்கும் காவலர்கள்



வேலூர் , செப்.4-

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் பணியாற்றும் காவலர்கள் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரத்தினகிரி சிஎம்சி வளாகத்தில் இருதயம் உள்ளிட்ட முக்கிய நோய்களுக்கு சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

நாட்டின் எல்லையை இரவு, பகலாக ராணுவ வீரர்கள் பாதுகாப்பதால் நாடு பாதுகாப்பாக இருப்பதை நாம் உணர முடியும். அதேபோல், உள் நாட்டு மக்களின் பாதுகாப்பு என்பது காவல் துறையை நம்பியுள்ளது. சட்டம்-ஒழுங்கு, குற்றச்சம்பவங்கள் எதுவாக இருந்தாலும் காவல் துறையின் செயல்பாடு இல்லாமல் மக்கள் நிம்மதியாக இரவு உறக்கத்தை தொடர முடியாது.

பொதுவாகவே, காவலர் பணி என்பது சமூக பணி என்றே அழைக்கப்படுகிறது. சமூகத்தை பாதுகாக்கும் பணிக்கு வந்தவர்களுக்கு நேரம், காலம் எதுவும் இருப்பதில்லை. எந்த நேரத்திலும் குடும்பத்தை மறந்து பணிசெய்ய தயாராக இருக்கவேண்டும். உழைத்து, உழைத்தே ஓடாய் போகும் காவலர்கள் அவர்களின் குடும்பத்தை பாதுகாக்க இருப்பது மருத்துவக் காப்பீட்டு திட்டம் மட்டுமே. அதுவும், இல்லாவிட்டால் பல காவலர் குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

அப்படி இருக்கின்ற மருத்துவக் காப்பீட்டு திட்டமும் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட காவலர்களுக்கு அவசர தேவைக்கு பயன்படுத்த முடியாமல் இருப்பதாக காவல்துறையினர் வேதனை தெரிவிக்கின்றனர். இது குறித்து, பெயர் குறிப்பிட விரும்பாத காவலர்கள் கூறும்போது, ''காவல் துறை ஆயுதப்படையில் பணியில் சேர்ந்து ஊர், ஊராக சுற்றிவிட்டு காவல் நிலையத்துக்கு வரும் நேரத்தில் திருமணம் செய்து கொண்டாலும் வேலை, வேலை என்றுதான் சுற்றுகிறோம்.

தொடர் பணியால் எங்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டு 40 முதல் 45 வயதுக்குள் ரத்த அழுத்தம், சர்க்கரை, இருதய பாதிப்பு என ஏதாவது ஒரு உடல் உபாதைகளை சுமக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறோம். காவல் துறையினருக்கு குடும்ப மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் மாதந் தோறும் ரூ.295 வீதம் பணம் பிடித்தம் செய்யப்படுகிறது.

ஆண்டுக்கு ரூ.7.5 லட்சம் தொகைக்கு சிகிச்சை பெற முடியும். எங்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இணைந்திருக்கும் மருத்துவ மனைகளுக்கு சென்றால் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு செலவில்லாமல் சிகிச்சை பெற முடியும். காப்பீட்டு நிறுவனங்களின் சிகிச்சையை தாண்டி வேறு பெரியளவில் சிகிச்சை பெற வேண்டுமானாலும் காவல்துறை நண்பர்களின் உதவியைத்தான் நாட வேண்டும். காவலர்களிடம் வசூல் செய்துகொடுக்கும் பணம் மட்டுமே பல நேரங்களில் எங்களின் உயிரை காப்பாற்றிவருகிறது.

எங்களின் நிலைமை இப்படி இருக்கின்ற நிலையில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் உள்ள காவலர்களின் நிலைமை காப்பீட்டு திட்டத்தால் பயன்பெற முடியாத நிலை உள்ளது. ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தை பொறுத்தவரை சிஎம்சி மருத்துவமனைக்கு தான் காவலர்கள் அதிகம் சிகிச்சைக்காக அனுமதிக்கப் படுகின்றனர். அங்கு காவல் துறையினருக்கு வழங்கிய காப்பீட்டு திட்டத்தில் இதுவரை சிகிச்சை பெற்று வந்தனர். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் காவலர் குடும்பங்கள் உள்ளனர். இவர்கள், அனைவரும் சிஎம்சியை நம்பித்தான் இருக்கின்றனர். கடந்த சில மாதங்களாக சிஎம்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றால் இருதயம், மூளை, நரம்பு தொடர்பான சிகிச்சைகளுக்கு ரத்தினகிரி வளாகத்துக்குச் செல்லுமாறு கூறுகின்றனர்.

அங்கு சிகிச்சைக்கு சென்றால் எங்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் சிகிச்சை பெற முடியாது என்று கூறுகின்றனர். இதனால், பல காவலர்களின் குடும்பத்தினர் சிகிச்சைக்கு பணத்தை திரட்ட முடியாமல் திணறி வருகின்றனர். பலர் மாவட்ட காவல் நிர்வாகத்தின் பரிந்துரையால் சிகிச்சை கட்டணத்தில் சலுகை பெற்று வருகிறோம்.

இருந்தாலும், நாங்கள் மாதந்தோறும் இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்கு பணத்தை கட்டியும் எந்த பிரயோஜனமும் இல்லை. உங்களுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தில் சிகிச்சை அளிக்க முடியாது என சிஎம்சி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கின்றனர். அவசரத்துக்கு அவர்களை நம்பித்தான் அங்கு செல்கிறோம். கடைசியில் அவர்களும் எங்களை கைவிடுவதால் நாங்கள் எங்கு செல்வது. இதற்கு என்ன காரணம் என்றாவது தெளிவாக கூறினால் அதற்கு ஏற்ப நாங்கள் வேறு இடங்களுக்கு செல்வோம்" என தெரிவித்தனர்.

இது தொடர்பாக சிஎம்சி நிர்வாகத்தரப்பில் விசாரித்தபோது, "ராணிப்பேட்டை சிஎம்சி வளாகத்தை இன்சூரன்ஸ் திட்டத்தில் இணைக்குமாறு விண்ணப்பித்துள்ளோம். அந்த இணைப்பு பணி முடியாமல் இருப்பதால் இதுபோன்ற சிக்கல் இருக்கிறது. இதற்காக, தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்'' என மட்டும் தெரிவித்தனர்.

காவல் துறையினருக்கு இருக்கும் பிரச்சினைகளை தற்காலிகமாக தீர்வு காணும் வகையில் இன்சூரன்ஸ் நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட வேறு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். இல்லா விட்டால் சிகிச்சை பெற்றுக்கொண்டு அதற்குரிய பணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்த நடைமுறைக்கு சற்று கால தாமதம் ஏற்படும் என தெரிவித்தனர்.

இது குறித்து, காவல் துறை அதிகாரிகள் தரப்பில் விசாரித்தபோது ''இந்த தகவல் எங்கள் கவனத்துக்கு இப்போதுதான் வந்துள்ளது. இதுகுறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்தனர்.

# தமிழக அரசின் மாநில நல்லாசிரியர் விருது மதுரை மாவட்டத்தில் 13 ஆசிரியர்கள் தேர்வு



மதுரை , செப்.4-

தமிழக அரசின் மாநில நல்லாசிரியர் விருதுக்கு மதுரை மாவட்டத்தில் 13 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளான செப்.5ம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் சார்பில் அன்றைய தினம் நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது என்னும் நல்லாசிரியர் விருதாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் மதுரை மாவட்டத்தில் 13 ஆசிரியர்கள் நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்குரிய விருது தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் சென்னையில் நாளை செப்.5ம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

தொடக்கக்கல்வித்துறை: 1. க.கார்த்திகேயன், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பெரியார்நகர், திருப்பரங்குன்றம், 2. அ.அமிர்தசிதரான்மணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சீமானூத்து, உசிலம்பட்டி ஒன்றியம், 3. அ.ஜோசப் ஜெயசீலன், தலைலமை ஆசிரியர், மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சிங்காரத்தோப்பு மதுரை தெற்கு, 4 எப். ஹெலன், தலைமை ஆசிரியர், மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, சொக்கிகுளம் மதுரை தெற்கு, 5 மு.தாமரைச்செல்வி, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, மைக்குடி, திருமங்கலம் 6. ரா.மகேஸ்வரி, தலைமையாசிரியர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குருவிளாம்பட்டி மதுரை மாவட்டம்.

பள்ளிக்கல்வித்துறை; 1.செ.வெண்ணிலாதேவி, முதுகலை ஆசிரியர் அரசு மேல்நிலைப்பள்ளி பாரபத்தி, 2 ச.சிந்தியா, பட்டதாரி ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம், 3.ஏ.எல். துர்கா, தலைமை ஆசிரியர், சவுராஸ்ட்ரா (பெண்கள்) மேல்நிலைப்பள்ளி, மதுரை, 4.ஏ.சேவியர் ராஜ், தலைமை ஆசிரியர், புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, கீழவாசல் மதுரை, 5.சௌ. உமாமகேஸ்வரி தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சருகுவலையப்பட்டி, 6. நா.மீனாட்சி சுந்தரம், முதுகலை ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஒத்தக்கடை, மெட்ரிக் பள்ளி: 1.ப.பிரபாகரன், முதல்வர், கேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கோ.புளியங்குளம் மதுரை.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# செப்டம்பர் 17ஆம் தேதி வேலூரில் திமுக முப்பெரும் விழா :முதல்வர் கடிதம்





# தமிழக அரசின் நல்லாசிரியர் விருது

## புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 ஆசிரியர்கள் தேர்வு

# முல்லைப் பெரியாறு கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் 70 சதவீதம் நிறைவு




| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 04.09.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |

புதுகை

வரலாறு

நாளிதழ்

04.09.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தாதாபாய் நௌரோஜி , இந்திய அரசியல்வாதி (பி.1825) (இ.1917)



பூபேந்திரநாத் தத்தர் , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1880) (இ.1961)



சுசில்குமார் சிண்டே , ஆந்திராவின் 19வது ஆளுநர் (பி.1941)



கிரான் மோரி , இந்தியத் துடுப்பாளர் (பி.1962)



## இன்றைய நினைவு நாள்

கே. பாலசிங்கம் , இலங்கை அரசியல்வாதி (பி.1876) (இ.1942)



ஸ்டீவ் இர்வின் , ஆத்திரேலிய இயற்கை ஆர்வலர் (பி.1962) (இ.2006)



குமாரி ருக்மணி , தமிழகத் திரைப்பட நடிகை (பி.1929) (இ.2007)

